தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள்

**ந.க.எண். 358/அ1/2018, நாள். 25.06.2018**

***

பொருள். பள்ளிக் கல்வி – மெட்ரிகுலேசன் பள்ளிகள் – பள்ளிக் கட்டட வரைபட அனுமதி – நகர் மற்றும் ஊரமைப்புத்துறை இசைவினைப் பெற இணைய வழியாக விண்ணப்பித்தல் – அறிவுரை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை. 1. ஆரசாணை (நிலை) எண். 76 நகர் மற்றும் ஊரமைப்பு (UD4(3))த் துறை நாள். 14.06.2018
2. நகர் மற்றும் ஊரமைப்புத் துறை ஆணையரால் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டம் நாள். 25.06.2018

***

பார்வை–1இல் உள்ள அரசாணையில், 01.01.2011க்கு முன்னர் திட்டம் சாராப் பகுதியில் (Non-Plan area) கட்டப்பட்ட பள்ளிக் கட்டடங்களுக்கு நகர் மற்றும் ஊரமைப்புத் துறையின் இசைவினைப் பெறுதல் சார்ந்து ஆணை வழங்கப்பட்டு விரிவான வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி அரசாணையினை நடைமுறைப்படுத்துதல் சார்ந்து ஆய்வுக் கூட்டம், பார்வை–2இல் உள்ளவாறு நகர் மற்றும் ஊரமைப்புத் துறை ஆணையரால் நடத்தப்பட்டது.

நகர் மற்றும் ஊரமைப்புத் துறை ஆணையரால் தெரிவிக்கப்பட்ட விவரங்களைக் கொண்டு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் கீழ்க்குறிப்பிட்டுள்ள அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

- பார்வை–1இல் உள்ள அரசாணையினை அனைத்து மெட்ரிகுலேசன் மற்றும் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளித் தாளாளர்களுக்கும் அனுப்பப்ப வேண்டும்
- தங்கள் மாவட்டத்தில் செயல்படும் அனைத்துவகை சுயநிதிப் பள்ளிகளுக்கும் (Self financing schools) இந்த அரசாணை அனுப்பப்பட வேண்டும்
- அந்தந்த மாவட்டத்தைச் சார்ந்த நகர் மற்றும் ஊரமைப்புத் துறை துணை/ உதவி இயக்குநர்களைத் தொடர்பு கொண்டு இதுசார்ந்து உடன் ஆலோசிக்க வேண்டும்.
- திட்டம் சாராப் பகுதியில் (Non-Plan area) 01.01.2011க்கு முன்னர் உள்ளாட்சி அமைப்பிடம் அனுமதி பெற்று பள்ளிக் கட்டடம் கட்டப்பட்ட பள்ளிகளை கண்டறிந்து பட்டியலிடவேண்டும்.
- அவ்வாறு கட்டடம் கட்டப்பட்டுள்ள பள்ளித் தாளாளர்களின் கூட்டம், 28.06.2018 அன்று அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட வேண்டும்.

தபிபா

- மேற்படி கூட்டத்திற்கு நகர் மற்றும் ஊரமைப்புத்துறை துணை/ உதவி இயக்குநரை அழைத்து இப்பொருள் சார்ந்து தாளாளர்களுக்கு உரிய விளக்கம் அளிக்கக் கோர வேண்டும்.
- திட்டம் சாராப் பகுதியில் (Non-Plan area) 01.01.2011க்கு முன்னர் உள்ளாட்சி அமைப்பிடம் அனுமதி பெற்று கட்டப்பட்ட பள்ளிக் கட்டடங்களுக்கு நகர் மற்றும் ஊரமைப்புத் துறையின் இசைவினைப் பெற இணைய வழியாக விண்ணப்பிக்க பார்வை–1இல் உள்ள அரசாணையில் மூன்று மாத காலம் அவகாசம் வழங்கப்பட்டுள்ளதால், அதனைப் பயன்படுத்தி உடன் விண்ணப்பிக்க அறிவுறுத்த வேண்டும்.
- இரண்டு மாவட்டங்களை ஒருங்கிணைத்து ஒரு நகர் மற்றும் ஊரமைப்புத்துறை அலுவலகம் இருப்பின் சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்கள் கலந்தாலோசித்து கூட்டத்திற்கான நாள்/ நேரத்தினை தெரிவு செய்ய வேண்டும்.
- பிரதி வாரம் வியாழக் கிழமையன்று சார்ந்த பள்ளித் தாளாளர்கள் கூட்டம் நடத்தி பள்ளிக் கட்டடத்திற்கு நகர் மற்றும் ஊரமைப்புத் துறை இசைவினைப் பெற விண்ணப்பித்ததை உறுதி செய்ய வேண்டும்.
- மேற்குறிப்பிட்டுள்ளவாறு கூட்டம் நடத்தப்பட்டு, ஒவ்வொரு வாரமும் வெள்ளிக் கிழமை, விண்ணப்பிக்க வேண்டிய மொத்த பள்ளிகள், விண்ணப்பித்த பள்ளிகள் சார்ந்து பெயர்பட்டியலுடன் அறிக்கை அளிக்க வேண்டும். (படிவம் இணைப்பு)

மேற்குறிப்பிட்டுள்ள அறிவுரைகளின்படி செயல்பட்டு, திட்டம் சாராப் பகுதியில் (Non-Plan area) 01.01.2011க்கு முன்னர் உள்ளாட்சி அமைப்பிடம் அனுமதி பெற்று கட்டப்பட்ட பள்ளிக் கட்டடங்களுக்கு நகர் மற்றும் ஊரமைப்புத் துறையின் இசைவினைப் பெற முறையாக விண்ணப்பம் சமர்ப்பித்ததை உறுதி செய்ய அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு. படிவம்

மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர்

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுலுலர்கள்

25/06/2018

நகல். பள்ளிக் கல்வித் துறை அரசு முதன்மைச் செயலாளருக்கு தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது

நகல். ஆணையர், நகர் மற்றும் ஊரமைப்புத்துறை அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது

நகல். பள்ளிக் கல்வி இயக்குநருக்கு தொடர் நடவடிக்கைக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.

நகல். தொடக்கக் கல்வி இயக்குநருக்கு தொடர் நடவடிக்கைக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.

**பள்ளிக் கட்டிட அனுமதிப் பெற்ற பள்ளிகளின் விவரம்**

மாவட்டத்தின் பெயர்:

| வரிசை எண் | மாவட்டத்தில் உள்ள மொத்த மெட்ரிகுலேசன் பள்ளிகளின் எண்ணிக்கை | 01.01.2011க்கு முன்னர் கட்டப்பட்டு DTCP/LPA த்துறை அனுமதி பெற்ற பள்ளிகளின் எண்ணிக்கை | 01.01.2011க்கு முன்னர் கட்டப்பட்டு உள்ளாட்சி அமைப்பிடம் கட்டிட அனுமதி பெற்ற பள்ளிகளின் எண்ணிக்கை | 01.01.2011ற்கு பின்னர் கட்டப்பட்டு DTCP/LPA த்துறை அனுமதி பெற்ற பள்ளிகளின் எண்ணிக்கை | 01.01.2011ற்கு பின்னர் கட்டப்பட்டு உள்ளாட்சி அமைப்பிடம் கட்டிட அனுமதி பெற்ற பள்ளிகளின் எண்ணிக்கை | எந்த வித கட்டிட அனுமதியும் பெறப்படாமல் இயங்கும் பள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

குறிப்பு:-

பள்ளிகளின் பெயர் பட்டியல் இணைக்கவும்.